**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.32/2013 |
| Prosecution Witness | : | அ.சா.5 |
| Name | : | ஜோன் |
| Father's/Husband Name: | : | பென்ஜமின் தர்மராஜ் |
| Address : | : | 3/316 பி ஜானகி நகர், பாடாலூர் மெயின் ரோடு, பெரம்பலூர் மாவட்டம் |
| Age | : | 70/2021 |

**தேதி: 23/12/2021**

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். வேல்குமார் என்பவரை எனக்கு தெரியாது. எனக்கு சொக்கலிங்கபுரத்தில் ஒரு நிலம் இருந்தது. அதை ஏசுவடியான் அவருக்கு வேண்டுமென என்னிடம் கேட்டார். நான் தரமாட்டேன் என மறுத்தேன். ஆனால் அந்த நிலம் வேண்டுமென கெஞ்சி கேட்டார். ஏசுவடியான் எனது அக்காவிற்கு நெருங்கிய பழக்கமானவர். மிகவும் பிடிவாதமாக கெஞ்சி கேட்டதால் என்னுடைய இடத்தில் 12 செண்ட் இடத்தை கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன். மீதி இடத்தையும் அவருக்கு எழுதி கொடுக்குமாறும் அதற்கு பக்கத்தில் வேறு நிலம் உள்ளது என்றும் அதை அவர் எனக்கு கொடுப்பதாகவும் கூறினார். பின்பு அவரது மகன் மணிஜான்சன் என்பவர் பெயரில் அதிகாரம் கொடுக்கப்பட்ட இடத்தை எனது பெயருக்கு எழுதி

கொடுத்தார். ஆனால் அதிலும் 2 செண்ட் இடத்தை ரோட்டுக்காக சென்றுவிட்டது என்று கூறி கொடுத்தார். நான் எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்காக விண்ணப்பம் செய்தபோது கிராம நிர்வாக அலுவலர் ஏற்கனவே அந்த இடம் வேறு பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டதாக கூறினார். இதை நான் ஏசுவடியானிடம் கூறினேன். ஆனால் அதற்கு அவர் நாம்தான் அந்த இடத்தை முதலில் வாங்கியுள்ளோம் என்றும் அதனால் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறி என்னிடம் ஒரு வக்காலத்து நாமாவில் கையொப்பம் பெற்றுச்சென்றார். பின்பு நான் அது சம்மந்தமாக பல முறை ஏசுவடியானை சந்தித்த போது அவரே அந்த பிரச்சினையை தீர்த்துக்கொள்வதாகவும், அவருடைய பெயருக்கு அந்த இடத்தை நான் எழுதிக்கொடுக்கவேண்டும் என்றும் கூறினார். அந்த இடத்திற்கு கிரயமாக ரூ.2.50 லட்சம் கூறினார். நானும் ஒப்புக்கொண்டேன். அதன்படி என்னிடம் ரூ.50 ஆயிரம் முன்தொகையாக கொடுத்து ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொண்டார். அந்த ஒப்பந்ததின் அசலை அவர் வசமே கொடுத்துவிடும்படியும் கேட்டார். நானும் அந்த பத்திரத்தை கொடுத்துவிட்டேன். மீதி ரூ.2 லட்சத்தை 3 மாதத்தில் எனக்கு செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். ஆனால் அதன்படி எனக்கு பணத்தை செலுத்தவில்லை. மேலும் எனது அக்கா ஜான்சி மற்றும் அவரது மகள் பெல்லா சாவித்திரி ஆகியோரின் இடத்தை மோசடியாக ஒப்புக்கொண்ட அளவைவிட கூடுதலான இடத்தை எழுதிக்கொண்டார். அதனால் நாங்கள் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் எங்களை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை :**

நான் இடைநிலை ஆசிரியராக பணியாற்றி தற்சமயம் பணி ஓய்வு பெற்றுஉள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் காவல்துறையின் விசாரணையின்போதும் கூறினேன் என்றால் சரிதான். நான் ஏசுவடியானுக்கு கொடுத்த இடத்தின் ஆவணத்தையோ அல்லது ஏசுவடியான் மகன் எழுதிக்கொடுத்த இந்த ஆவணத்தையோ நான் காவல் துறை விசாரணையின்போது கொடுத்தேனா என எனக்கு நினைவில்லை. மீண்டும் சாட்சி அந்த ஆவணத்தை ஏசுவடியானே பெற்றுக்கொண்டார் எனவும் அதனால் நான் கொடுத்து இருக்க வாய்ப்பு இல்லை எனவும் கூறுகிறார். ஏசுவடியான் ஆவணத்தை திரும்ப பெற்றுக்கொண்டார் என இந்த வழக்கிற்காக நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் ஆவணத்தை திரும்ப ஒப்படைத்து இருந்தால் அது குறித்து நான் காவல் துறை விசாரணையின்போது கூறியிருப்பேன் என்றால் சரிதான். நான் அதை கூறியுள்ளேன். எனது அக்கா மற்றும் அவரது மகள் எதிரிகளுக்கு எழுதிக்கொடுத்ததாக கூறப்படும் ஆவணங்களில் நான் சாட்சியாக எதுவும் கையொப்பம் இடவில்லை. மோசடியாக எனது அக்கா மற்றும் அவரது மகளிடம் இருந்து எழுதி வாங்கப்பட்டதாக கூறப்படும் ஆவணங்களில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு வரவேண்டிய தொகைக்காகத்தான் நான் புகார் கொடுத்தேன் என்றால்

சரிதான். எனது அக்கா மற்றும் அவரது மகள் என்னுடன் சுமூகமாக பேச்சுவார்த்தையில் உள்ளனர் என்றால் சரிதான். பெல்லா சாவித்திரி இந்த வழக்கில் சாட்சியம் அளித்த விபரம் எனக்கு தெரியும். எனக்கு இந்த வழக்கின் விபரங்கள் தெரியாது என்றாலும், இந்த வழக்கின் புகார்தாரர் எனது உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏசுவடியான் மீது இதுவரையிலும் உரிமையியல் வழக்கு எதுவும் தொடரவில்லை என்றால் சரிதான். நான் எழுதிக்கொடுத்த இடத்திற்கு பதிலாக வேறு இடத்தை எதிரி எழுதிக்கொடுத்துள்ளதால்தான் நான் உரிமையியல் வழக்கு தொடரவில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்து வேறு ஒரு பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என நான் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது என்றாலும், அதனால் நான் அளிக்கும் சாட்சியம் ஏற்க தகுந்தல்ல என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur,

CUPBLR